ÉVALUATION DIAGNOSTIQUE DES ÉLÈVES ALLOPHONES

# Compréhension de l'écrit

CYCLE 3

Langue d'origine : tamoul

CANOPÉ

| குடும்பப்பெயர்: | பெயர்: |
| --- | --- |

**NIVEAU : FIN DE CM1**

## 1 பின்வரும் வாக்கியத்தை வாசிக்கவும்

ஸேம்மி, ஒரு சிறுவன், அவனுடைய புதிய பள்ளிக்கு முதல்முறை செல்கிறான்.

அவன் ஒரு கொடுங்கனவு கண்டான். மாணவர்கள் குழந்தை உடலுடனும் ஒரு பறவையின் தலையைக் கொண்டதாக கனவு கண்டான். மனித தலையுடன் ஒரு கொடூரமான பார்வையுடன், ஒரு மிகப்பெரிய கழுகின் உடலைக் கொண்டதாக ஆசிரியருக்கு அது வித்தியாசமாக இருந்தது.

அவன் மீண்டும் தனது கிராமமான லாபஸியை நினைத்துக்கொண்டான். அந்த சிறிய பள்ளியில், சந்தேகமே இல்லை அங்கே அவர்கள் பள்ளிக்குத் திரும்பப் போகிறார்கள். செங்கல் சுவர்கள், அழுக்கான தரைகள் மற்றும் முற்றத்தின் நடுவில் கிணறு போன்றவற்றை நினைத்துப் பார்க்கிறான். இடைவேளைகளின் போது, முற்றத்தில் நுழையும்போது கிணறுக்கு இடப்பக்கம் ஒரு பெரிய மரத்தின் நிழலில் உட்காருவதை அவர்கள் விரும்பினார்கள்.

அவனுடைய புதிய பள்ளிக்குச் செல்லும்போது, அவன் வீட்டை வெளியே வந்து வலப்பக்கம் திரும்பி, பின் மரங்களைப் பின்தொடர்ந்து, பின் இடப்பக்கம் முதல் தெருவுக்குச் செல்ல வேண்டும். கடைசியாக, அவன் நேராக முன்னால் செல்ல வேண்டும். அதே தெருவில் பூங்காவிற்கு எதிரே பள்ளி உள்ளது.

| MI | MF | MS | TBM |
| --- | --- | --- | --- |

## கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்

### 2 சரியான கேள்வியை வட்டமிடவும். இந்த வாக்கியம்:

- ஒரு கதை
- ஒரு சமையல் குறிப்பு
- ஒரு கையேடு
- ஒரு கவிதை


| | | | |
|---|---|---|---|
| MI | MF | MS | TBM |


### 3 சரியான பதிலை வட்டமிடவும். உங்களைப் பொருத்தவரை, ஸேம்மியின் கொடுங்கனவு:


- தொந்தரவு செய்கிறது
- உறுதியளிக்கிறது
- விளையாட்டுத்தனமானது
- மகிழ்ச்சியாயிருக்கிறது


| | | | |
|---|---|---|---|
| MI | MF | MS | TBM |

### 4 ஸேம்மியின் லாபஸியிலுள்ள பள்ளியைக் குறிப்பிடுவதை வட்டமிட்டு மற்றவற்றை அடிக்கவும்.










| | | | |
|---|---|---|---|
| MI | MF | MS | TBM |

**5** வரைபடத்தில், ஸேம்மி பள்ளிக்குச் செல்ல வேண்டிய வழியைக் கண்டறியவும்.
ஆரம்பப் புள்ளி ஸேம்மியின் வீடு, அது குறுக்குக் குறியால் குறிக்கப்பட்டிருக்கிறது.



| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

## பின்வரும் வாக்கியத்தை வாசிக்கவும்:

எனினும், இந்த காலையில் வழியைக் கண்டறிய முடியவில்லை. இந்த மரம், நேற்று இது இங்கிருந்ததா? அது சரியாக இருக்காது என ஸேம்மி நினைக்கிறான். ஒரு புதிய உணர்வு அவனை தனியாக இருக்க விடாது அவனுடைய கடுங்கனவின் உருவங்களை நினைத்துப் பார்க்கிறான்.

திடீரென, ஒரு குளிர்ந்த காற்று வீச துவங்கியது, ஸேம்மி அவனுடைய தொப்பியைக் கீழே இழுத்தான், இது அவன் அப்பா அவனுக்குக் கொடுத்தது. அது அவனுக்கு உடனடியாக திரும்ப உறுதிபடுத்தியது.

பள்ளியின் முன்பு, ஸேம்மி திடீரென நிற்கிறான். வானம் மேகங்களால் சூழப்பட்டது மற்றும் வானத்திலிருந்து ஒன்றிரண்டு மழைத்துளிகள் விழுந்தன. எங்கேயும் காத்திருக்காமல், அவன் பள்ளிக்குள் நுழைக்கிறான்.

Iபின் அவன் பள்ளி முற்றம் லாபஸியில் இருந்ததை விட வித்தியாசமாக இருப்பதைக் கண்டுபிடித்தான். அவனுக்கு எங்கு செல்ல வேண்டும் என தெரியவில்லை. அவன் பதிவு செய்தபோது பெற்றுக்கொண்ட அவனுடைய திட்ட அட்டவணையைப் பார்த்தான் ஆனால் அது அவனுக்குப் பெரிதாக உதவவில்லை.

### நேர அட்டவணை: வகுப்பு A

| | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| 8:00 | வாசிப்பு | | | | வாசிப்பு |
| 9:00 | வரலாறு | கணிதம் | கணிதம் | விளையாட்டு | புவியியல் |
| 10:00 | புவியியல் | அறிவியல் | நவீன மொழிகள் | விளையாட்டு | இலக்கணம் |
| 11:00 | நவீன மொழிகள் | நவீன மொழிகள் | | விளையாட்டு | வரலாறு |
| 13:00 | அறிவியல் | இலக்கணம் | | வாசிப்பு | நவீன மொழிகள் |
| 14:00 | இசை | கலைகள் | | கணிதம் | கணிதம் |
| 15:00 | | | | வரலாறு | |

## NIVEAU : FIN DE CM2

சரியான பதிலை வட்டமிடவும்

### 6 எந்த சொற்றொடர் ஒரு கேள்வி?

- குளிர்ந்து காற்று வீச துவங்குகிறது.
- இந்த மரம், நேற்று இது இங்கிருந்ததா?
- ஒரு புதிய உணர்வு அவனை தனியாக இருக்க விடாது.
- அவனுக்கு எதுவுமே புரியவில்லை!

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

### 7 இந்த வாக்கியத்தில், வானிலை எப்படி உள்ளது?

நீங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட பதில்களை வட்டமிட வேண்டும் என்பதில் கவனமாக இருக்கவும்.

- குளிர்ந்த காற்று
- வெப்பமான காற்று
- மேகமூட்டம்
- குறைவான மழை
- தெளிவான வானம்
- அதிக மழை
- வெயில்

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

## 8 ஸேம்மி ஏன் அவனது திட்டத்தைப் பார்க்கிறான்?

- ஏனெனில் அவனுக்கு கணிதம் பிடிக்கும்.
- ஏனெனில் மழை பெய்யப்போகிறது.
- ஏனெனில் அவன் தகவலுக்காக காத்திருக்கிறான்.
- ஏனெனில் அவனுக்கு வியாழன் விளையாட்டு உள்ளது.

MI MF MS TBM

## 9 பொதுவாக ஸேம்மி அவனுடைய நாளை எத்தனை மணிக்கு துவங்குகிறான்?

- எட்டு மணிக்கு
- ஒன்பது மணிக்கு
- பத்து மணிக்கு

MI MF MS TBM

## 10 எந்த நாட்களில் ஸேம்மிக்கு வரலாறு வகுப்புகள் கிடையாது?

- திங்கள் மற்றும் வியாழன்
- செவ்வாய் மற்றும் புதன்
- புதன் மற்றும் வியாழன்
- திங்கள் மற்றும் வெள்ளி

MI MF MS TBM

## பின்வரும் வாக்கியத்தை வாசிக்கவும்:

திடீரென, இடிமின்னல் தோன்றுகிறது. விளையாட்டு மைதானத்தில் விழ துவங்கும் கடுமையான மழையை ஸேம்மி சிறிது தவிர்க்கிறான். குழந்தைகள் பதற்றமடைகிறார்கள் மற்றும் மழையிலிருந்து விடுபட முயற்சித்து பாதுகாப்பான இடத்தைக் கண்டுபிடிக்க ஒருவரையொருவர் தள்ளுகிறார்கள். இது வீட்டுக்கோழியையும் கடந்து இரவின் அவனுக்கு வந்த கொடுங்கனவையும் நினைவுப்படுத்துகிறது.

ஒவ்வொருவரும் அவனைத் தவிர்க்க முயற்சிப்பதாகத் தெரிகிறது. திடீரென ஒரு சிறுவன் அவனை அணுகுகிறான். அவன் ஸேம்மிடம் அவனது தொப்பியை சுட்டிக்காட்டி ஏதோ கேட்கிறான், ஆனால் ஸேம்மியால் அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. எப்படி அவனால் முடியும்? அவனுடைய புதிய நாட்டின் அதிகாரப்பூர்வ மொழியான தாக்கோனியை அவன் பேசுவதில்லை. அந்த சிறுவன் வெளிப்படையாகவே எரிச்சல் அடைந்து அங்கிருந்து போகிறான்.

அவனுடைய அழுகையைக் கட்டுப்படுத்த முயற்சிக்கும்போது, மற்றொரு பையன் ஒரு நீல நிற ஸ்வெட்டரை அணிந்திருப்பதைப் பார்க்கிறான். விரைவாக வெளியே செல்லும் முன், முற்றத்தில் அடிக்கப்பட்ட தொப்பியைக் குறிக்கும் ஒரு குறியீட்டை நோக்குகிறான். இந்தப் பள்ளியில் தொப்பிகள் தடை செய்யப்பட்டுள்ளதைப் பின்னர் ஸேம்மி புரிந்து கொள்கிறான்.

கடைசியாக, மணி அடிக்க துவங்குகிறது, மாணவர்களை கவனிக்க ஆசிரியர் வருகிறார். அவருடைய பார்வைக் கடுமையானதாக இருக்கிறது, அவருடைய மூக்கு நீளமாகவும் வளைந்தும் உள்ளது. அவர் ஒரு கருப்பான கையில்லாத சட்டை அணிந்திருந்தார் அது பெரிய இறக்கைகளை ஒத்திருந்தது. அதை நம்ப முடியவில்லை; அது ஸேம்மியின் கனவில் உள்ளது போலவே இருக்கிறது!

வகுப்பறைக்குள்ளே ஆசிரியர் வந்தவுடன், அவர்களுடைய நோட்டில் திட்ட அட்டவணையை உடனடியாக ஒட்டுமாறு கூறுகிறார். மற்ற மாணவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்த்து, என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொள்கிறான், ஆனால் எல்லாம் இன்னும் தெளிவில்லாமல் இருக்கிறது.

→

அதே சமயம் ஆசிரியர் அவனுக்கு அடுத்து வருகிறார். அவனுடைய தோளிலில் அவருடைய கைகளைப் போட்டு வகுப்பிலுள்ள மற்றவர்களுக்கு அவனைக் காட்டுகிறார். ஸேம்மி நிம்மதியடைந்தான். அவர் கூறும் எல்லாவற்றையும் அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும், அவருடைய குரலைக் கேட்கிறான், அது மென்மையாகவும் இனிமையாகவும் இருக்கிறது. அவனுடைய புதிய சகாக்கள் அவனை ஆர்வத்தோடு பார்க்கிறார்கள், அவர்களில் நீல நிற ஸ்வெட்டர் அணிந்த பையன் புன்னகைக்கிறான். ஒரு ஒளிக்கற்றை ஸேம்மியின் கன்னத்தில் குடி கொள்கிறது. அது அவனுடைய பள்ளியின் முதல் நாள் மற்றும் அனைத்தும் சிறப்பாக போய் கொண்டிருக்கிறது.

## NIVEAU : FIN DE 6E

## கேள்விகளுக்கும் பதிலளிக்கவும்

**11** சரியான பதிலை வட்டமிடவும். பத்தி 2-இல், மற்ற குழந்தைகள்

• இனிமையாக இருக்கிறார்கள்     • இனிமையாக இல்லை

• எங்களுக்குத் தெரியவில்லை

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

**12** கதையில் தோன்றுவது போல சொற்றொடர்களை எண்ணிடவும், முதல் நிகழ்விலிருந்து மிகவும் சமீபத்திய ஒன்று வரை.

.................... • ஒரு பையன் அவனை அணுகுகிறான்.

.................... • குழந்தைகள் ஒவ்வொருவரையும் தள்ளுகிறார்கள்.

.................... • ஸேம்மி ஒரு கொடுங்கனவு காண்கிறான்.

.................... • இடி மின்னல் தோன்றுகிறது.

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

**13** ஆசிரியர் ஒரு கழுகா? சரியான பதிலை வட்டமிடவும்.

- ஆம்
- இல்லை
- எங்களுக்குத் தெரியாது

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

**14** வாக்கியத்திலிருந்து ஸேம்மியின் உணர்வுகளைத் தொடர்புடைய உறுப்புகளுடன் இணைக்கவும். அனைத்து வாக்கியங்களையும் பயன்படுத்த வேண்டும் என்பதில் கவனமாக இருக்கவும்.

ஸேம்மி கவலையாக இருக்கும்போது

ஸேம்மி உறுதியோடு இருக்கும்போது

- குழந்தைகள் அவனை ஆர்வமாக பார்க்கிறார்க
- குழந்தைகள் அவனைத் தவிர்க்கிறார்க
- இடிமின்னல் தோன்றுகிறது
- அவன் ஓய்வெடுக்கிறான்
- அவன் கண்ணீரைக் கட்டுப்படுத்துகிறான்
- சூரியன் தோன்றுகிறது

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

**15** கடைசி பத்தியில் குறியீடுகளைப் பார்க்கவும். உங்களைப் பொருத்தவரை, கதையின் அடுத்த கட்டம் எவ்வாறு நடக்கும்? சரியான பதிலை வட்டமிடவும்.

- ஸேம்மி பெரிய சிக்கல்களைக் கொள்வான்.
- ஆசிரியர் ஸேம்மியை கவனிப்பதில்லை
- ஸேம்மி பழகி கொள்வான், மேலும் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவான்.
- நீல நிற ஸ்வெட்டரிலுள்ள பையன் அவனுடைய எதிரியாவான்.

| MI | MF | MS | TBM |
|---|---|---|---|

**Rappel des codes de correction :**
**MI** = maîtrise insuffisante **MF** = maîtrise fragile **MS** = maîtrise satisfaisante **TBM** = très bonne maîtrise
**MI et MF :** non acquis **MS et TBM :** on considère que c'est acquis